செய்தி வெளியீடு எண் : 2282 நாள் : 17.12.2022

**குவைத் நாட்டில், 16.12.2022 அன்று, திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்க குவைத் பிரிவின் 25 ஆம் ஆண்டு வெள்ளிவிழா, சமூக நல்லிணக்க நிகழ்ச்சியாக சிறப்பாக நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு.மு.அப்பாவு அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் தனது உரையில், "பெரியாரை கடவுள் மறுப்பாளர் என்று சுருக்கிப் பார்க்கக் கூடாது, கடவுளின் பெயரால் ஒரு சாரார் மற்றவர்களை ஆலயத்திற்குள் விடாமல், ஆலயம் உள்ள தெருவில் கூட அனுமதிக்காமல் இழிவுபடுத்துவதை எதிர்த்துதான் பெரியார் போராடினார். தமிழ்நாட்டில் சமூக நீதியை நிலைநாட்டுவதற்கான பணிகளை முன்னெடுத்த பெருமை பெரியாரையேச் சேரும்" என்று குறிப்பிட்டார்.

பெரியாரின் வழியில் அறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோர் சமூக நீதியை பாதுகாத்ததையும் சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் எடுத்துரைத்தார். சிறுபான்மை மக்களின் கல்விக்காக காயிதே மில்லத் அவர்கள் ஆற்றிய பணிகளையும் அவர் எடுத்துரைத்தார்.

மேலும் மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் பேசுகையில், "1996 ஆம் ஆண்டில் கலைஞர் ஆட்சிக்கு வந்தபோது தான் தமிழ்நாட்டில் முதன்முதலாக தகவல் தொழில்நுட்பத் துறையை வளர்ப்பதற்காக டைடல் பார்க் அமைக்கப்பட்டது. அப்போதைய ஒன்றிய அமைச்சர் திரு. முரசொலி மாறனும், கலைஞரும் எடுத்து கொண்ட முயற்சியால் தான் இன்றைக்கு தமிழக இளைஞர்கள் வெளிநாடுகளுக்கு சென்று இந்த துறையில் கோலோச்சுகின்றனர்" என்று குறிப்பிட்டார்.

மேலும் மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் தனது உரையில், "கலைஞரின் வழியில் இப்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழக சட்டசபையில் காகிதமில்லா வரவு செலவு திட்டம் தாக்கல் செய்ய வைத்திருக்கிறார். சட்டசபை நிகழ்ச்சிகளை தொலைக் காட்சியில் நேரடி ஒளிபரப்பு செய்து

மக்கள் நேரடியாக சட்டசபை நிகழ்ச்சிகளை பார்க்க வைத்திருக்கிறார்" என்றும் தெரிவித்தார்.

அதே போல், ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர் மட்டுமில்லாமல் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் தொகுதியில் நீண்ட காலமாக நிறைவேற்றப்படாமல் உள்ள கோரிக்கைகளை அளிக்க வேண்டும் என்றும் அதை நிறைவேற்றித் தருவதாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார் என்றும் மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்.

புதிதாக பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சுறுசுறுப்பாக இயங்குவதை சுட்டிக்காட்டிய சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் தமிழக அரசினால் இராதாபுரம் தொகுதியில் சர்வதேச விளையாட்டு மையம் தொடங்கப்படுவதையும், ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு விளையாட்டு அரங்கம் கட்டப்படுவதையும் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார். வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் நலனுக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வரும் திட்டங்களையும் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் திரு.எம்.முகம்மது, டாக்டர். அமீர் அகமது, டி.வி.எஸ். குரூப் சேர்மன் டாக்டர். எஸ்.எம்.ஹைதர் அலி, சுப்ரீம் குரூப் சேர்மன் திரு.ஏ.சித்திக் திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்க குவைத் பிரிவின் சங்க நிர்வாகிகள் டாக்டர். முனீர் அகமது, திரு.ஜலாலுதீன், திரு. ரமேஷ், திரு. இதயத்துல்லா, குவைத் அனைத்து தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளும் மற்றும் குவைத் வாழ் தமிழர்களும் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in